## தமிழ்நாட்டில் திருத்தேர் செல்கின்ற

# கோயில்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் புதைவடக் கம்பிகள் அமைக்கும் பணி!

### சட்டப் பேரவையில் – மின் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி விளக்கம்!

சென்னை, ஏப். 6-

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது மின் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி, "தமிழ் நாட்டில் திருத்தேர் செல்கின்ற கோயில்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் புதை வடக் கம்பிகள் அமைக்கும் பணிகள்" குறித்து விளக்கமளித்தார்.

கேள்வி நேரத்தின் போது பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**ந. தியாகராஜன்:** முசிறி சட்டமன்றத் தொகுதிக் குட்பட்ட தொட்டியத்தில், மதுரை காளியம்மன் கோயிலில் 2 தேர்கள் ஊர் வலம் வரும். அங்கு புதை வடக் கம்பி அமைத்துத் தந்து, உதவுமாறு மின்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



**அமைச்சர் வி. செந்தில் பாலாஜி:** தமிழ்நாட்டில் திருத்தேர் செல்கின்ற கோயில்களைச் சுற்றியுள்ள பகுதிகளில், புதை வடக் கம்பிகள் அமைப்பதற்காக முக்கியத் திருக் கோயில்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு, அதற்கான பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. சில கோயில்களுக்கான பணிகள் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ள அந்தத் திருக்கோயிலுக்கான பணிகள் குறித்தும் ஆய்வு செய்யப்படும். தேவை ஏற்படின், நிதிநிலைக்கேற்ப நிச்சயமாக அரசு பரிசீலிக்கும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

---

## 2027-ஆம் ஆண்டிற்குள்

# 18,000க்கும் மேற்பட்ட வகுப்பறைகள் கட்டி முடிக்க திட்டமிட்டிருக்கிறோம்!

### சட்டப்பேரவையில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தகவல்!

**சென்னை, ஏப்.6-**

**சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது உறுப்பினர்களின் கேள்விக்கு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பதிலளிக்கையில் 2027-ஆம் ஆண்டிற்குள் 18,000-க்கும் மேற்பட்ட வகுப்பறைகள் கட்டி முடிக்க திட்ட மிட்டிருக்கிறோம் என்று தெரிவித்தார்.**



சட்டப்பேரவையில் உறுப்பினர் நத்தம் ஆர். விசுவநாதன், நத்தம் ஒன்றியம், லிங்கவாடி கிராமத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா? என்ற கேள்வியைத் தொடர்ந்து அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அளித்த பதில் வருமாறு:-

தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களை வணங்கி, தங்களுடைய அனுமதியோடு பதில் அளிக்கிறேன். 5 வகுப்பறைகள் மற்றும் ஒரு ஆய்வகம் கட்ட ரூ.1 கோடியே 42 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்போது பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளது. விரைவில் இக்கட்டடங்கள் திறக்கப்பட்டு மாணவர்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும். மேலும், இந்தக் கல்வியாண்டிற்கென்று தனியாக ஒரு மூன்று வகுப்பறைகள், 2 கழிவறைகள் மற்றும் குடிநீர் வசதி ஏற்படுத்த 94 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டு பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளது.

சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், புதிதாக கூடுதல் கட்டடம் தேவைப்படுகின்ற நேர்வில், நெருக்கடி இல்லாமல் புதிதாக கட்டடம் கட்ட முடியுமா என்று கேட்டிருக்கிறார். நான் ஏற்கெனவே கூறியதுபோன்று, இதுவரையிலும் 191 மாணாக்கர்கள் படிக்கின்ற அந்தப் பள்ளிக்கூடத்திற்கு போதுமான அளவில் வகுப்பறைகள், கழிவறைகள் உள்ளிட்ட வசதிகள் இருக்கின்றன. இதுமட்டுமல்லாமல், தனியாக அங்கிருக்கின்ற CEOs அவர்கள் மூலமாக ஆய்வு செய்ய சொல்கின்றோம். உறுப்பினர் அவர்கள் கூறியதுபோன்று, litigation land ஆக இருக்கக்கூடிய அந்த நிலம் சம்பந்தமாகவும், அந்த இடத்தை பள்ளிக்கூடத்திற்கு எடுத்துக் கொள்ள முடியும் என்றால், அது பள்ளிக்கூடத்தின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் உறுதுணையாக இருக்கும் என்றால், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோர் மூலமாக ஒரு குழு அமைத்து, அந்த இடத்தை எடுப்பதற்கான முயற்சியும், கண்டிப்பாக பள்ளிக் கல்வித் துறை சார்பாக எடுக்கப்படும். ஏனெனில், அரசாங்கத்திற்கு இடம் வந்தால் சந்தோஷம்தான்.

ஏற்கெனவே ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு நம்முடைய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்களின் முன்னெடுப்பாக இருந்தது தான் பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம். ரூ.7,500 கோடி தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அன்றையதினம் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் படிக்கின்றபோது, 8,000க்கும் மேற்பட்ட வகுப்பறைகள் திறந்திருக்கிறோம். ஆய்வகங்கள், சுற்றுச்சுவர் கட்டுதல் உள்ளிட்ட பணிகளும் முடிக்கப்பட்டிருக்கின்றன. இப்போதும் கிட்டத்தட்ட 4,412 வகுப்பறைகள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதேபோன்று, கழிவறைகள், ஆய்வகங்கள் மற்றும் சுற்றுச்சுவர் ஆகியவை கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

**நத்தம் தொகுதியில் 162 வகுப்பறைகள்!**

குறிப்பாக நத்தம் தொகுதியில் கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்களைப் பொறுத்தவரை, இதுவரையில் 162 classrooms கட்டிக் கொடுத்திருக்கிறோம்; 2 labs, boys toilet 4, girls toilet 4, drinking water unit 4, compound wall என இப்படி இந்த நத்தம் தொகுதிக்கு மட்டும் கட்டிக் கொடுத்திருக்கிறோம். அது மட்டுமல்லாமல், அவர் சார்ந்திருக்கிற மாவட்டத்திற்கு மட்டும் பார்த்தீர்களென்றால், கிட்டத்தட்ட 395 classrooms, 30 labs, boys toilet 14, girls toilet 14, drinking water unit 8 என்று தொடர்ந்த ஆங்காங்கே கட்டப்பட்டு வருகின்றது. தொடர்ந்து இந்த 4 ஆண்டுகளாகத்தான் காமராஜர் காலத்தில் கட்டப்பட்ட buildingலிருந்து இன்றைக்கு படிப்படி யாக இதனை நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய இலக்கு என்பது 2027 ஆம் ஆண்டிற்குள் கிட்டத்தட்ட 18,000க்கும் மேற்பட்ட வகுப்பறைகளை கட்டி முடிக்க வேண்டுமென்கிற இலக்கினை நோக்கி நாம் சென்று கொண்டிருக்கிறோம். ஏற்கெனவே நான் சொன்னதுபோன்று, கிட்டத்தட்ட 8,000 வகுப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. சுமார் 4,000 வகுப்பறைகள் கட்டுவதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றது. எனவே, இதுமாதிரி யார், யார் கேட்கிறார்களோ, அவர்கள் எல்லோருக்குமான பதிலாகத்தான் இதனை நான் சொல்ல விரும்புகிறேன். ஆக, நீங்கள் கேட்பது போல, எங்கெங்கெல்லாம் தேவைப்படுகின்றதோ, அந்த இடத்தில் கட்டடங்களைக் கட்டுவதற்கான நிதியை நாங்கள் தொடர்ந்து வழங்கிக் கொண்டுதான் இருக்கின்றோம். இந்த ஆண்டும்கூட தனியாகவொரு ஆயிரம் கோடி ரூபாயை நிதியமைச்சர் அவர்கள், முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி ஒதுக்கி யிருக்கி ன்றார். எனவே, infrastructureஐப் பொறுத்தவரை, இன்னும் அதிகமாக மேம்படுத்த வேண்டும். ஆங்காங்கே மரத்தடியில் உட்கார்ந்திருப்பதாக நீங்கள் சொல்கிறீர்கள். இருக்கின்ற கட்டடங்கள் இடிந்து பிள்ளைகளின் தலையில் விழுந்து விடக் கூடாது என்கின்ற அந்த ஒரு அடிப்படையில்தான் அங்கே பணிகள் நடைபெற்று வருகின்றன. அதே நேரத்தில் எங்கெல்லாம் மரத்தடியில் கீழே உட்கார்ந்திருக்கிறார்களோ, அதற்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறோம். வருங்காலத்தில் அதுவும் இல்லாத அளவுக்கு எங்களுடைய பணி இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**செ.ஸ்டாலின் குமார்:** என்னுடைய துறையூர் தொகுதியில், முருங்கபட்டி அரசு மேல்நிலைப் பள்ளி, பச்சபெருமாள்பட்டி பேரறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகள் எங்களுடைய தொகுதியின் கடைகோடியில் இருக்கின்றன. எனவே, இந்த இரு பள்ளிகளுக்கும் கூடுதல் வகுப்பறை கட்டடமும், சேனப்பநல்லூர் ஊராட்சியில் இருக்கக்கூடிய அரசு மேல்நிலைப் பள்ளியில் சுற்றுச்சுவர் இல்லாமல் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் இந்தக் கூடுதல் வகுப்பறை கட்டடமும், சுற்றுச்சுவர் கட்டித் தர முன்வருவாரா?

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் செ. ஸ்டாலின் குமார் அவர்கள் சொன்னதுபோல, இந்த ஆண்டு ஆயிரம் கோடி ரூபாய் தனியாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதில் கண்டிப்பாக அவர் சொல்கின்ற அந்தப் பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான வகுப்பறைகளும், சுற்றுச்சுவரும் கட்டித் தருவதற்கான ஏற்பாடுகளை செய்வோம் என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**எஸ். தேன்மொழி:** நிலக்கோட்டையில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியை ஏற்படுத்தித் தருவதற்கு அரசு முன்வருமா?


**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** நிலக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், இருபாலர் பள்ளியைப் பிரித்துத் தர வேண்டுமென்று இரண்டு நாட்களுக்கு முன்பாகவும் என்னிடத்தில் சொன்னார்கள். கண்டிப்பாக, எங்கள் துறை ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும். 4, 5 உறுப்பினர்கள் இதுபோன்ற request வைத்திருக்கிறார்கள். அது சார்ந்திருக்கிற சாதகங்கள் என்ன இருக்கிறது என்பதையெல்லாம் பார்த்து, study செய்து, நல்ல ஒரு தீர்வை கண்டிப்பாக எடுப்போம் என்பதை தங்கள் வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பதிலளித்தார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நா. புகழேந்தி
### ஏப்ரல் 6 (2024)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றத் தொடங்கியவர்.

1974ல் கிளைச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி, பொதுக்குழு உறுப்பினர், ஒன்றியப் பொறுப்பாளர், மூன்று முறை ஒன்றியச் செயலாளர், மாவட்ட பொருளாளர், மாவட்ட அவைத்தலைவர், பின்னர் இரண்டு முறை விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

ஊராட்சி மன்ற தலைவராவும் – ஊராட்சி ஒன்றிய பெருந் தலைவராகவும் – இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

"மக்களோடு மக்களாக வாழ்ந்த புகழேந்தி அவர்களது மறைவு, விக்கிரவாண்டி தொகுதிக்கும், விழுப்புரம் மாவட்டத்திற்கும் மட்டுமின்றி, கழகத்திற்கும் பேரிழப்பாகும்" என கழகத் தலைவர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

சிம்லாவுக்கு அடுத்தபடியாக மலைப்பிரதேசத்தில் கட்டப்பட்டுள்ள

# இரண்டாவது மருத்துவக் கல்லூரி மருத்துவமனை!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைப்பது குறித்து சமூக வலைதளப்பதிவு!



சென்னை, ஏப்.6-

சிம்லாவுக்கு அடுத்தபடியாக மலைப்பிரதேசத்தில் கட்டப்பட்டுள்ள இரண்டாவது மருத்துவக்கல்லூரியை திறந்து வைக்கிறேன் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெருமிதத்துடன் சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

**நமது திராவிட மாடல் அரசின் பெருமையாகத் திகழவுள்ள சிம்லாவுக்கு அடுத்தபடியாக மலைப் பிரதேசத்தில் கட்டப்பட்டுள்ள இரண்டாவது மருத்துவக் கல்லூரி மருத்துவமனையான இதனைத் திறந்து வைக்கவும் ரூ.727 கோடி மதிப்பில் 1703 முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்து, 56 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 15,634 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிடவும் நாளை 'மலைகளின் அரசி' நீலகிரிக்கு வருகிறேன்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

---

## பெரம்பலூர் மாவட்டம் – மலையாளப்பட்டி கிராமம் அருகில்

# சின்னமுட்லுவில் நீர்த்தேக்கம் அமைக்க வேண்டும்!

### சட்டப்பேரவையில் – ம. பிரபாகரன் கோரிக்கை!

சென்னை, ஏப்.6-

சட்டப்பேரவையில், கேள்வி நேரத்தின்போது பேசிய பெரம்பலூர் தொகுதி கழக எம்.எல்.ஏ., ம.பிரபாகரன், "பெரம்பலூர் மாவட்டம் - மலையாளப் பட்டி கிராமம் அருகில் சின்னமுட்லுவில் நீர்த்தேக்கம் அமைக்க அரசு முன்வரவேண்டும்!" எனக் கோரிக்கை விடுத்தார்.

கேள்வி நேரத்தின் போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**ம.பிரபாகரன் :** பெரம்பலூர் மாவட்டம், மலையாளப்பட்டி கிராமம் அருகில் சின்னமுட்லுவில் நீர்த்தேக்கம் அமைக்க அரசு முன்வருமா?

**அமைச்சர் துரைமுருகன் :** பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், மலையாளப்பட்டி கிராமம் அருகேயுள்ள சின்ன முட்லுவில் நீர்த்தேக்கம் அமைக்க இயக்குநர், இந்திய புவியியல் ஆய்வு மையம், சென்னை மற்றும் நீர்வளத் துறையைச் சார்ந்த பொறியாளர்களால் கூட்டு தள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில், இந்தத் திட்ட தளத்தில் நீர்த்தேக்கம் அல்லது வேறு ஏதேனும் கட்டமைப்புகள் அமைத்து நீரைத் தேக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.



**ம. பிரபாகரன்:** நீர்வளத் துறையின் சார்பில் அரும்பாவூர் ஏரியைப் புனரமைக்க 3 கோடியே 41 இலட்சம் ரூபாயும், கல்லாற்றின் குறுக்கே வி. களத்தூர் அணையைப் புனரமைக்க 3 கோடியே 25 இலட்சம் ரூபாயும், குன்னம் பகுதியில் நரி ஓடை, பரவாய் ஓடை அணைகளைப் புனரமைக்க 2 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 8 கோடியே 66 இலட்சம் ரூபாயை நீர்வளத் துறையின் சார்பில் கொடுத்ததற்கு எனது தொகுதியின் சார்பாகவும், மாவட்டத்தின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களது பெரம்பலூர் மாவட்டம் விவசாயத்தை முதன்மையாகக் கொண்ட மாவட்டம்.

வேப்பந்தட்டை வட்டத்தில் மட்டும் சுமார் 45,000 விவசாய தொழிலாளர்கள் நிறைந்த பகுதி. இந்தப் பகுதியில் மக்காச் சோளம், பருத்தி, நெல், கரும்பு. மரவள்ளி பயிர்கள் பெரும்பான்மையாக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

வேப்பந்தட்டை வட்டம், மலையாளப்பட்டி ஊராட்சியில் சின்ன முட்லு நீர்த்தேக்கம் என்பது பச்சைமலையில் உற்பத்தியாகின்ற கல்லாறு பருவமழைக் காலங்களில் கனமழையின்போது கல்லாற்றின் உபரிநீர் வெளியேறி வெள்ளாறு வழியாக வீணாகக் கடலில் கலக்கிறது. எனவே, சின்ன முட்லு பகுதியில் நீர்த்தேக்கம் அமைப்பதன் மூலமாக நீரைச் சேகரித்து விவசாயத்திற்கும், கால்வாய் அமைத்து ஏரிகளுக்கும், குடிநீருக்கும் கொடுத்தால் அந்தப் பகுதியிலுள்ள அரும்பாவூர், அ.மேட்டூர், விஜயபுரம், தழுதாழை, பெரியம்மாபாளையம், பூலாம்பாடி, வெங்கனூர், கள்ளபட்டி, கடம்பூர், வெங்கலம், கிருஷ்ணாபுரம், வெண்பாவூர் போன்ற இருபதுக்கும் மேற்பட்ட கிராமங்களுக்கும் பயனுள்ள திட்டமாக இது அமையும். இது இங்குள்ள விவசாயிகள், விவசாயச் சங்கங்கள், பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கை. மேலும், 2021 சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரத்தில், நமது தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருவதாக உறுதியளித்திருந்தார்கள். எனவே, அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து சின்னமுட்லு நீர்த்தேக்கத்தை அமைக்க ஆவன செய்யுமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் துரைமுருகன்:** திட்டம் அமைய வேண்டுமென்பதுதான் அரசினுடைய ஆசை. அதற்காகத்தான் இந்தத் திட்டத்தை 2017ல் முதலில் ஆய்வு செய்யப்பட்டது. அதற்குப்பிறகு அந்த மண் எப்படி இருக்கிறது என்பதற்காக மறுபடியும் 2018ல் அந்த மண்ணை சேகரித்து, ஆழ்துளைக் கிணறு போட்டு, அதைப் பரிசீலனை செய்யப்பட்டது. அதற்குப்பிறகு CONTINUOUS ஆகப் பார்த்தீர்களென்றால், 2017, 2018, 2019 ஆம் ஆண்டுகளில் DIRECTOR GENERAL OF THE GEOLOGICAL SURVEY OF INDIA அவர்கள் நேராக வந்து, அந்த இடத்தை ஆய்வுசெய்து, ஒரு முடிவெடுத்தார்கள். இந்தத் திட்டத் தளத்தின் மேற்பரப்பில் தற்போது நில மட்டத்திற்குக்கீழ் 12 மீட்டர் ஆழம் வரை பல்வேறு அளவுகள் உள்ள கூழாங்கற்கள் மண் கலந்து காணப்படுவதாலும், அதற்குக்கீழ் சிதைவுற்ற பாறைகள் காணப்படுவதாலும், இத்திட்ட தளத்தில் நீர்த்தேக்கம் அல்லது நீரைத் தேக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லையென்று 2022ல் அறிக்கை அளித்தார்கள். எனவே, பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், மலையாளப்பட்டி கிராமத்தின் அருகே சின்னமுட்லு நீர்த்தேக்கம் அமைக்க கருத்துருவைக் கைவிடுவதைத்தவிர வேறு வழியில்லை.

**ம. பிரபாகரன்:** எப்படியாவது தாயுள்ளம் கொண்ட முதலமைச்சருடைய அறிவிப்பிற்கிணங்க, அந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம் அயன் பேரையூர் கிராமத்தில் வெள்ளாற்றில் ஒன்றிய அரசு ஜல் ஜீவன் திட்டத்தின் மூலமாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக மூன்று ஊடுருவல் கிணறுகளை அமைத்துள்ளது.

இந்தத் திட்ட மதிப்பீட்டில் ரூ.18.50 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைப்பதாக இருந்தது. ஆனால், ஒன்றிய அரசு நிதி ஒதுக்காமல் தடுப்பணை கட்டும் திட்டத்தைக் கைவிட்டது. இந்தத் தடுப்பணை அமைப்பதன் மூலமாக சுமார் 15 கிராமங்களுக்கு குடிநீர் தங்குதடையின்றி கிடைக்கும். எனவே, தமிழக அரசின் நிதியின் மூலமாக தடுப்பணை அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவாரா?

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம் வாலிகண்டபுரம் கிராமத்தில் கோனேரியாற்றில் ஒரு தடுப்பணையும், விசுவகுடி நீர்தேக்கத்திலிருந்து அன்னமங்களம் ஏரிக்கு நீரை கொண்டுசெல்ல வாய்க்கால் அமைத்து தந்து அந்தப் பகுதி விவசாயிகளின் கோரிக்கையை அமைச்சர் அவர்கள் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு முன்வருவார்களா?

**அமைச்சர் துரைமுருகன்:** வேப்பந்தட்டை பக்கம் வெங்கம் கிராமத்தின் அருகிலே கல்லாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டமுடியுமா என்று கேட்கிறார்கள். கல்லாற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட 6.50 கோடி ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. நிதிநிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் அது ஏற்றுக்கொள்ளப்படும். அயன் பேரையூர் ஏரியை தூர் வாருவதற்கு அன்றே நடவடிக்கை எடுக்கப்பட்டு கொள்ளளவு நிரப்பப்பட்டிருக்கிறது. அவருடைய தொகுதியை பொறுத்தவரையிலே 2021 ஆம் ஆண்டிலே 6.57 கோடியிலே பன்டிகாபாடி கிராமதித்திலே கல்லாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணையும், 6.21 கோடியிலே வி.களத்தூர் கிராமத்திலே ஒரு தடுப்பணையும், 2022-2023 ஆம் ஆண்டில் 10 கோடியிலே பிரம்மதேசம் கிராமத்திலே ஒரு தடுப்பணையும் கட்டப்பட்டுள்ளது. கல்லாற்றின் குறுக்கே மேலும் ஒரு தடுப்பணை கட்ட தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் ஆராயப்படுகிறது.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

---

## சென்னை – பாடி எலக்ட்ரிக்கல் உரிமையாளர்

# சி.ஆனந்தன் மனைவி மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஏப். 6-

சென்னை, பாடியைச் சேர்ந்த எலக்ட்ரிக்கல் உரிமையாளர் சி.ஆனந்தனின் மனைவி திருமதி. மீரா ஆனந்தன் (வயது 70) அவர்கள் உடல் நலக்குறைவினால் நேற்று முன்தினம் (04.04.2025) காலை மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவலறிந்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், துணைவியாரை இழந்துவாடும் சி.ஆனந்தன் மற்றும் குடும்பத்தாருக்கு தமது ஆழ்ந்த வருத்தத்தையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.